# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நான்குநேரி

முன்னிலை திரு.R. பூமிநாதன், B.Sc.,B.L.,

நீதித்துறை நடுவர், நான்குநேரி

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**பட்டிகை வழக்கு எண். 90/2019**

**CNR NO: TNTL20-000382-2019**

தமிழக அரசு

மூலகரைப்பட்டி காவல்நிலைய குற்ற எண்.148/2017

காவல் உதவி ஆய்வாளர் மூலம் ... குற்றமுறையிடுனர்

/எதிர்/

1) செல்லா, வயது 26/19,

த/பெ.ராமஜெயம்,

சந்தைதெரு, முனைஞ்சிப்பட்டி.

2) பூல்பாண்டி, வயது 29/19,

த/பெ.ராமஜெயம்,

சந்தைதெரு, முனைஞ்சிப்பட்டி. ... குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

இவ்வழக்கானது கடந்த 15.04.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையிடுனர் தரப்பில் அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை - 1 திரு.பரணீந்தர் அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சுப்பையா , அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்களைப் பரிசீலனை செய்த பின்னர் இன்றுவரை நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்.

## தீர்ப்பு

**1.** மூலகரைப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)-இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

## 2. குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்

இவ்வழக்கின் எதிரிகளிடம், சாட்சி-1 சென்னையில் வைத்து பைக்கை அடகுவைத்து பணம் வாங்கிய வகையிலும், எதிரிகளின் பெரியம்மா மகள் சபரி என்பவரை 2 வது எதிரி

திருமணம் செய்து கொடுத்த வகையிலும் முன்விரோதத்தை மனதில் வைத்து கடந்த 31.10.2017 அன்று மாலை சுமார் 4.30 மணிக்கு முனைஞ்சிப்பட்டி ஊரில் உள்ள சந்தைக்கு கீழ்பக்கமுள்ள பேச்சியம்மன் கோவில் சுடலை பீடம் திண்டில் சாட்சி-1 , சாட்சி-2 மற்றும் அவரது நண்பர்களும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது அங்கு வந்த எதிரிகள் கையில் மறைத்து வைத்திருந்த அருவாளால் சாட்சி-1 ஐ பார்த்து தாயோழி உன்னை வெட்டிக் கொன்னாதாம்ல பிரச்சினை தீரும் என்று சொல்லி 1வது எதிரி அ.சா.1ன் தலையின் இடதுபுறம் ஓங்கி வெட்டி சிறுகாயம் ஏற்படுத்தியும், 2 வது எதிரி அருவா புடங்கால் அ.சா.1ன் முதுகில் ஓங்கி அடித்து கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)- இன் கீழ் அரசுத் தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய அரசுத் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207-ன் படி வழங்கப்பட்டது. போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டுகளை வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டுகளை மறுத்துக் கூறினார்கள்.

**4.** அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப் பட்டுள்ளனர். அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**

(i) அ.சா.2 ஆதிமூலம் தனது சாட்சியத்தில் கடந்த 01.11.2017 ம் தேதி எஸ்.எஸ்.ஐ மணிவண்ணன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1 ஓட்டக்காரன் என்பவர் கொடுத்த அ.சா.ஆ.2 புகார்வாக்குமூலத்தினை பெற்று, அதனடிப்படையில் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் கதிரேசன் அவர்கள் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று அ.சா.ஆ 4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார்

செய்தும், சாட்சிகள் ஓட்டக்காரன், சந்தானம், வேலு, லெட்சுமி ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தும், அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து அ.சா.ஆ.6 காயசான்றிதழ் பெற்றும், வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். பட்டியல் சாட்சி 9 நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தினால் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆதிமூலம் அ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

(ii) புகார்தாரரான அ.சா.1 ஓட்டக்காரன் புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1-ன் கையெழுத்து தன்னுடையதுதான் என்று அரசு தரப்பை ஆதரிக்காமல் பிறழ்சாட்சியாகியுள்ளார். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 8 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள்.

**6.** அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து குற்றஞ்சாட்டபட்டவர்களுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது குற்றஞ்சாட்டபட்டவர்கள் அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் அனைத்தும் பொய் என்று கூறினார்கள். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறியதால் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

**7.** இவ்வாறான சூழ்நிலையில் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)-ன் கீழான அரசு தரப்பால் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே இந்த வழக்கில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**8.** அரசு தரப்பில் எதிரிகள், அ.சா.1 ஐ அவதூறான வார்த்தைகளால் பேசியும், அ.சா.1 ஐ அருவாளால் தாக்கியும், கொலைமிரட்டல் விடுத்ததை அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்து விட்டது. எனவே எதிரிகளுக்கு இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)-ன் கீழான தண்டனை வழங்க எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**9.** எதிரிகள் தரப்பில், எதிரிகளுக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. அரசு தரப்பு சாட்சிகள் யாரும் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபணம்

செய்யும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)-ன் கீழான குற்றவாளிகள் அல்ல என்று எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிடுமாறு கோரி வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

**10.** இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை குறித்து பரிசீலனை செய்கையில், முன்விரோதம் காரணமாக கடந்த 31.10.2017 அன்று மாலை சுமார் 4.30 மணிக்கு முனைஞ்சிப்பட்டி ஊரில் உள்ள சந்தைக்கு கீழ்பக்கமுள்ள பேச்சியம்மன் கோவில் சுடலை பீடம் திண்டில் அ.சா.1, சாட்சி-2 மற்றும் அவரது நண்பர்களும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது அங்கு வந்த எதிரிகள் கையில் மறைத்து வைத்திருந்த அருவாளால் அ.சா.1 ஐ அவதூறான வார்த்தைகளால் பேசியும், 1 வது எதிரி அருவாளால் அ.சா.1 ன் தலையின் இடதுபுறம் ஓங்கி வெட்டி சிறுகாயம் ஏற்படுத்தியும், 2 வது எதிரி அருவா புடங்கால் அ.சா.1 ன் முதுகில் ஓங்கி அடித்தும், கொலை மிரட்டல் விடுத்ததை அ.சா.ஆ.2 புகார்வாக்குமூலத்தின் மூலம் அறியமுடிகிறது. ஆனால் புகார்தாரரான அ.சா.1 முதல் விசாரணையில் வழக்கு சம்பவம் சுமார் 12 வருடங்களுக்கு முன்பு மாலை நேரத்தில் அ.சா.1 ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது கீழே விழுந்து தனக்கு காயம் ஏற்பட்டதாகவும், ஏற்பட்ட காயத்திற்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், அங்கு வந்த போலிசார் தன்னிடம் ஒரு கையொப்பம் வாங்கினார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என தனக்கு தெரியாது என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பம் தன்னுடையது தான் என்றும், எதிரிகளுடன் சமாதானமாக செல்கிறேன் என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. அடுத்தபடியாக, வழக்கு சம்பவத்தில் கண்ணுற்ற சாட்சிகளான சந்தானம் மற்றும் வேலு, கேள்விநிலை சாட்சியான லெட்சுமி ஆகியோர்களை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரணை செய்யாமல் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது அரசு தரப்பு வழக்கை பாதிக்கக்கூடியதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12.** அடுத்தபடியாக, பார்வை மகஜர் சாட்சிகளான மூர்த்தி மற்றும் ஆனந்த் ஆகியோர்களை அரசு தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யாமல் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளதை பார்க்கும்பொழுது அ.சா.ஆ.4 பார்வை மகசர் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் புலன் விசாரணை அதிகாரியால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதுதான் என்பதை அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. அடுத்தபடியாக, வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட அ.சா.1 க்கு கிசிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய அ.சா.ஆ.6 காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையில், அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. ஆனால் அ.சா.1 தனது சாட்சியத்தில் சுமார் 12 வருடங்களுக்கு முன்பு மாலை நேரத்தில் அ.சா.1 ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது கீழே விழுந்து தனக்கு காயம் ஏற்பட்டதாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியங்களிலிருந்து வழக்கு சம்பவத்தின் போது எதிரிகள் தாக்கியதால் அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டதா என்பது குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

**14.** மேலும், கடந்த 02.03.2026 ஆம் தேதி புகார்தாரரும், எதிரிகளும், ஊர் பெரியோர்களின் அறிவுரையின் அடிப்படையில் தரப்பினர்களுக்குள் சமாதானமாகிவிட்டதாக தெரிவித்து இருதரப்பினரும் கையொப்பமிட்டு சமாதான மனு ஒன்றினை குவிமுச பிரிவு 320(2)ன் கீழ் தாக்கல் செய்துள்ளனர். எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b)-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சமாதானமாக முடிக்கக் கூடிய குற்றச்சாட்டுக்கள் அல்ல என்பதால் இந்நீதிமன்றம் அந்த மனுவை அன்றைய தினமே தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. இந்த நிகழ்வானது தரப்பினர்களுக்கிடையே சமாதானமாகிவிட்டதை உறுதிபடுத்துகிறது.

**15.** இறுதியாக, அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரி மீது இதச பிரிவு 294(b), 324, 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய தவறிவிட்டதால் குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**16.** இவ்வழக்கில் எதிரிகள் பிணையில் செல்வதற்காக பிணையதாரர்களால் எழுதி கொடுக்கப்பட்ட பிணைப்பத்திரங்களை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிரிகள் நீதிமன்றத்தில் எழுதிக்கொடுத்துள்ள பிணைமுறிகளில் கு.வி.மு.ச.437A–ன் படி எழுதிக் கொடுத்த பிணைமுறியானது 6 மாதங்கள் கழித்து தானாக இரத்தாகும் என இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

**17.** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்படாததால் வழக்கு சொத்து குறித்து எந்தவொரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமையாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.03.10 16:37:53 +0530

நீதித்துறை நடுவர்,
நான்குநேரி.

**அரசுத் தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ஓட்டக்காரன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. ஆதிமூலம் (சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 01.11.2017 தேதியிட்ட புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 01.11.2017 தேதியிட்ட புகார்வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 01.11.2017 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 01.11.2017 தேதியிட்ட பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 01.11.2017 தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 01.11.2017 தேதியிட்ட அ.சா.1 ன் காயசான்றிதழ் |

**அரசுத் தரப்பு சான்று பொருள் :**

**இல்லை**

**குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :**

**இல்லை**

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.03.10 16:38:08 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

**Particulars under rule 106 of Criminal Rules of Prcatice-2019**
**Judicial Magistrate Court, Nanguneri**
**CC No.90/2019**

| | | |
|---|---|---|
| 1. | Name of the Police Station and the Crime Number of the Offence | Moolakaraipatty, P.S., Cr.No.148/2017 |
| 2. | Name, Age, Father Name | 1) Chella, S/o Ramajayam<br>2) Poolpandi, S/o Ramajayam |
| 3. | Occupation | Cooli |
| 4. | Residence | A1 & A2 - Munaijipatty |
| 5. | Occurrence | 31.10.2017 |
| 6. | Complaint | 01.11.2017 |
| 7. | Apprehension | A1 & A2 -13.11.2017 |
| 8. | Release on Bail | A1 & A2 – 13.11.2017 |
| 9. | Commitment | - |
| 10. | Commencement of Trial | 02.03.2026 |
| 11. | Closure of Trial | 06.03.2026 |
| 12. | Sentence or Order | 10.03.2026 |
| 13. | Service of copy of Judgment of finding on accused | - |
| 14. | Explanation of delay | - |

BOOMINATHAN
Digitally signed by BOOMINATHAN
Date: 2026.03.10 16:38:16 +0530

Judicial Magistrate,
Nanguneri.